**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**M.C. No. 7-2024**

Name : விஜயராகவன் (RW1 Cross) Date : 11.11.2025

Father Name : பக்கிரிசாமி :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. எனக்கும் மனுதாரருக்கும் கடந்த 24.03.2024 அன்று இருவீட்டார் சம்மதத்துடன் ஸ்ரீ காவேரியம்மன் ஆலயத்தில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு மனுதாரரின் பெற்றோர் 8 பவுன் நகைகளும், ரூ. 2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் செய்தார்கள் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு வேறொரு நபருடன் 2019ம் ஆண்டு திருமணம் நடைபெற்று சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் விவாகரத்து வாங்கிய ஆவணங்களை என்னிடம் காண்பிக்க வில்லை. மனுதாரர் என்னை 2வதாக திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. திருமணத்திற்கு பிறகு நல்லுச்சேரி நானும் மனுதாரரும் எனது பெற்றோர்களுடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். மனுதாரருக்கு முடக்கு வாதம் நோய் உள்ளது என்பதை என்னிடம் தெரிவித்து தான் எனக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த முடக்கு வாத நோயை சொல்லிக்காட்டி மனுதாரரிடம் தினமும் தகராறு செய்து துன்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. முடக்கு வாத நோய் மனுதாரருக்கு இருப்பதால் அவருக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு இல்லை என்று கூறி மனுதாரரை அவமானப்படுத்தி மனுதாரரை மன உலைச்சலுக்கு ஆளாக்கி உள்ளேன் என்றால் சரியல்ல.

3. ஆடி மாத சீர் கொடுத்து மனுதாரரை அவரது பெற்றோரும் சகோதரர் ரவிச்சந்திரன் அவர்களும் அழைத்து செல்ல வந்த போது அவர்களிடம்

மனுதாரரை அனுப்ப மாட்டேன் என கூறி தகராறு செய்து திட்டி அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன் என்பவர் மனுதாரரின் சகோதரர் அல்ல. அவருடன் வேலை பார்த்தவராவார். அதன் பிறகு மனுதாரரை அவரது பெற்றோர் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டு ஆடி மாதம் முடிந்து திரும்பி வருவதாக கூறி மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல. அது போன்ற ஒரு சம்பவமே நடக்கவில்லை. மனுதாரரின் மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் எங்கள் வீட்டில் தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை மனுதாரர் என்னிடம் கேட்ட போது நான் அவரை அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்ப மாட்டேன் என கூறி அவரை அடித்தேன் என்றால் சரியல்ல.

4. மனுதாரரரை எங்கள் ஊரில் உள்ள சவுக்குதோப்பிற்கு அழைத்து சென்று கத்தியை காட்டி மிரட்டி அவரது தாலி செயினை பிடிங்கி கொண்டு திருமண முறிவு பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு செல் என மிரட்டி திருமண முறிவு பத்திரத்தில் கையொப்பம் பெற்று கொண்டு அடித்து ஊரை விட்டு செல் என விரட்டி விட்டேன் என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் பயந்துகொண்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் உதவியுடன் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரியல்ல. இது நாள் வரை மனுதாரரர் அவரது பெற்றோர் வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரரின் பெற்றோர் மிகவும் வயதானவர் என்றால் சரிதான். அதனால் கணவர் என்ற முறையில் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க நான் கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.